திருச்சி தெற்கு மாவட்ட கழக மீனவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா, நலத்திட்ட உதவிகள், உபகரணங்கள் மற்றும் மேலாடைகள் வழங்கும் நிகழ்ச்சியில், மாவட்ட மீனவர் அணி தலைவர் குமார் வரவேற்புரையும், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சாந்தகுமாரி சாலமோன் மற்றும் மாநகர அமைப்பாளர் சையது பாவா ஆகியோர் முன்னிலையும் வகித்தனர். நிகழ்வில் நலத்திட்ட உதவிகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாநில கழக மீனவர் அணி செயலாளர் ஏ.ஜோசப் டான்லின் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், மாவட்ட மாநகரக் கழக நிர்வாகிகள் செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, குணசேகரன், ராஜேஷ்வரன், கே.கே.கே.கார்த்தி, நன்றியுரை மீனவர் அணி மாநகர தலைவர் ரத்தினவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மாபாளையம், ராக்கிணாம்பாளையம், கணேசன்புதூர் ஆகிய கிராமங்களில் உள்ள பொது மக்கள் கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் பரிசலில் பயணம் செய்து பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்களிடம் அவர்களது குறைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தெரிவிக்கபட்டுள்ளது. அவர் விரைவில் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார் என அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் பாலம் கட்டிதர உறுதியளித்தை தொடர்ந்து அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டில் - ஈரோடு தெற்கு மாவட்டத்திலிருந்து

1 லட்சம் இளைஞர்கள் பங்கேற்பு!

மாவட்ட - மாநகர இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

ஈரோடு, செப். 25-

ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், கழக இளைஞரணி மாநில துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் முன்னிலையில் கழக துணைப் பொது செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம், வி.சி.சந்திரகுமார், குறிஞ்சி என்.சிவகுமார், வீரமணி, மா.சு.ராதாகிருஷ்ணன் மாவட்ட கழக நிர்வாகிகள் கே.குமார் முருகேஸ், ஆ.செந்தில் குமார், செல்ல பொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி பொன்னுச்சாமி, என்.டி.பத்மநாபன், கோபால், பெருந்துறை பூபதி, ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு. சுப்பிரமணியம், மாநகர நிர்வாகிகள் இரா.சேகரன், விமல் (எ) நந்தகுமார், ஜி. சண்முகம், கே.சந்திரசேகர், பாத்திமா, நாகரத்தினம், பகுதி செயலாளர்கள்துணை மேயர் வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், விளையாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சங்கர், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கீதா கதிர்வேல் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரகுராம், பாலசுப்பிரமணியம், ராகவேந்திரன், நித்தின், விஜய், சதீஷ் மாநகரத் துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், ரமேஷ், சீனிவாசன், பார்த்திபன், சசி, நவீன், அன்பரசன் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இளைய கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க. இளைஞரணிக்கு புதிய ரத்தத்தை பாய்ச்சிடும் வகையில்

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இளைஞர் அணிக்கு நேர்காணல் நடத்தி மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை நியமித்து உள்ளார். அதன்படி ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணியில் மாவட்ட, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமித்து 'பணியாற்ற வாய்ப்பளித்தமைக்கு ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

29.7.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க.

இளைஞரணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி, இளைஞரணியின் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் எதை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதை தன் அனுபவத்தால் நேர்த்தியாக எடுத்துரைத்து, அனைத்து மாவட்ட மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுடனும் நேரம் ஒதுக்கி வரலாற்று சிறப்பு மிக்க புகைப்படம் எடுத்துக் கொள்ள வாய்ப்பளித்த கழக ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு தெற்கு

மாவட்ட இளைஞரணி சார்பில் இந்த கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும், ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி.யின் கைப்பாவையாக செயல்பட்டு வரும் ஆளுநர் ரவியை கண்டித்தும் 20.8.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தை வெற்றி பெற செய்த கழக நிர்வாகிகளுக்கும், இளைஞரணி மாணவரணி, மருத்துவரணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கும் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் இந்த கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடுவதையொட்டி தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட பேச்சுப்போட்டி மாரத்தான் போட்டிகளை சிறப்பாக நடத்துவதென்றும், அதிகப்படியான இளைஞர்களை இந்த போட்டிகளில் பங்கு பெற செய்வதென்றும், நவீன நூலகம் அமைத்திட ஏற்பாடு செய்வதென்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தி.மு.க இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட சேலத்தில் நடத்திட அறிவித்ததற்கு நன்றிகளையும் மேலும் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி மாநாட்டிற்கு 1 லட்சம் இளைஞர்களை திரட்டி இந்த இளைஞர் அணி மாநாட்டை வெற்றி அடைய செய்வோம் என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிக்கப்பட்ட இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கையை ஈரோடு தெற்கு மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட 4 தொகுதிகளிலும், தொகுதிக்கு 25,000 புதிய இளைஞர்களை உறுப்பினர்களாக்கி கழகத்திற்கு வலு சேர்ப்போம் என்று இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு எங்கும் இளைஞர்களை ஈர்க்கும் விதமாக மாவட்ட வாரியாக சென்று இளைஞர் அணிக்கு வலுசேர்க்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எண்ணத்திற்கேற்ப மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆலோசனைப்படி ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட இளைஞரணி செயல் வீரர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்துவது என்றும், இந்த கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பிற்கிணங்க பகுதி, ஒன்றிய வாரியாக பாசறை கூட்டம் மற்றும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தெருமுனை பரப்புரை கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட நான்கு தொகுதிகளிலும் சிறப்பாக நடத்துவது என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.